06.12.2024
அசல் வழக்கு எண்: 239/2019

வா.சா.1 சாட்சி தவமணி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்தை நான் யாரிடம் கிரையம் வாங்கினேன் என்றால் பாக்கியவதி என்பவரிடம் கிரையம் வாங்கினேன். பாக்கியவதி என்பவரிடம் மொத்தம் எத்தனை சென்டை கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் 2 1/2 சென்டை கிரையம் வாங்கினேன். பாக்கியவதி என்பவருக்கு யார் கிரையம் கொடுத்தது என்றால் அவரது தாயாரான தனலெட்சுமி என்பவர் பாக்கியவதிக்கு சீதனமாக கொடுத்துள்ளார். 28.03.2001ம் தேதியிட்ட தான செட்டில்மெண்டு ஆவணத்தில் தனலெட்சுமிக்கு உண்டான விஸ்தீரணம் 35 செண்டு என்றால் ஞாபகம் இல்லை. திருமங்கலம் வட்டம், செங்கப்படை பிட்1 கிராமம், சர்வே எண்.49/5A எண்ணில் 0.14.0 ஏர்ஸ் செண்டுதான் தனலெட்சுமிக்கு கிடைக்கபெற்ற சொத்து என்றால் சரியல்ல. தனலெட்சுமிக்கு தான செட்டில்மெண்டு மூலமாக கிடைக்கபெற்ற சொத்தில் தாவா சொத்து இல்லை என்றால் சரியல்ல.

தாவா சர்வே எண்ணில் முத்துலெட்சுமி என்பவரிடம் 11 செண்டு நான் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 11 செண்டிற்கான கிரைய ஆவணத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி கிரைய ஆவணத்தின் பதிவு எண்ணை நீதிமன்றத்தில் மறைத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சர்வே எண்ணில் கட்டுப்பட்ட சொத்தை விற்பனை செய்துவிட்டு வா.சா.ஆ. 3 ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. வா.சா.ஆ1 கிரைய ஆவணம் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

2014ம் ஆண்டு ஆவண எண்.5068/2014 என்ற ஆவணத்தின் படி 17.09.2014ம் தேதி சாந்தி என்பவரிடம் 5 1/2 சென்டை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய பிறகுதான் அவர் கிரையம் வாங்கினார். மேற்படி கிரைய ஆவணத்தில் சர்வே எண்.49/5Aயில் 0.14.0 ஏர்ஸ்க்கு சென்டு 35 ல் மையத்தில் பிரதிவாதி கிரையம் பெற்ற 7187 1/2 ச.அடி மனை இடத்தில் உள்ள கிரையம் என்றும் 5 சென்டு 182 3/4 ச.அடி என்றும் அவரது மனை இடத்திற்கு மேல்புறம் விடப்பட்ட 6 அடி கிழமேல் பாதையிலும் அதன் தொடர்ச்சியாக சர்வே எண். 49/3 ல் வடபுறம் விடப்பெற்ற பாதையிலும் புலங்கி ஓடை வரை செல்லும் பதை பாத்தியம் என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

தனலெட்சுமி மூலம் முத்துலெட்சுமிக்கு கொடுக்கப்பட்ட சொத்தில் நான் கிரையம் பெற்ற 11 சென்டு மட்டும்தான் எனக்கு பாத்தியம் என்றால் சரியல்ல. தனலெட்சுமி கிரையம் பெற்ற 35 சென்டையும் அனைவருக்கும் விற்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தாக காட்டப்பட்டுள்ள 2 1/2 சென்டு என்பது இந்த வழக்கிற்காக உருவாக்கப்பட்ட சொத்து என்றாலும் ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எனக்கு 11 சென்டில் உரிமையிருப்பது போல் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்திற்கு பாதை உட்பட அனைத்து உரிமையும் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி அவருடைய இடத்தில் வீடு கட்ட முயற்ச்சி செய்யும் போது நான் இந்த வழக்கை தவறுதலாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு தாவா சொத்தில் இடமில்லை என்று நான்

சொல்லமுடியாது என்றால் சரியல்ல. தனலெட்சுமி என்பவர் கொடுத்த பவர் பத்திரத்தின் அடிப்படையில் பிரதிவாதி முறையாக கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல.

2001ம் ஆண்டு 11 செண்டை கிரையம் பெற்ற போது தாவா சொத்தை ஏன் கிரையம் பெறவில்லை என்றால் அவர்கள் கிரையம் கொடுக்கும்போதுதான் வாங்க முடியும். பாக்கியவதிக்கு தனலெட்சுமி 2 1/2 செண்டை மட்டும்தான் கொடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கிரையம் பெற்ற 11 செண்டும் தாவா சொத்தும் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியை வீடு கட்டவிடாமல் தற்போது வரை தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி கிரையம் வாங்கியபடி அவருக்கு அனைத்து உரிமையும் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதியை அவரது இடத்திற்குள் போகவிடாமல் தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல.